# வருவாய்த்துறை அலுவலர் சங்கக்குரல்

# Varuvaithurai Aluvalar Sangakural

வருவாய்த்துறை அலுவலர் சங்க மாத இதழ் / Bilingual, Monthly

ஆசிரியர் : கே.சி.ராம்குமார்
Editor : K.C.Ramkumar

குரல் 30 / Kural 30 | டிசம்பர் 2018 / December 2018 | ஒலி 9 / Oli 9




## அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்


தனிப்பிரதி விலை ரூ.10/-
Single Issue Rs.10/-

ஆண்டு சந்தா ரூ.120/-
Annual Subscription Rs.120/-




திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற ஜாக்டோ-ஜியோ வேலை நிறுத்த ஆயத்த மாநாட்டில் மாநில பொருளாளர் இளங்கோவன் எழுச்சியுரை




தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கம், கன்னியாகுமரி மாவட்ட மையத்தின் சார்பில் நடைபெற்ற இரத்ததான முகாமில் மாநில பொது செயலாளர் சு.பார்த்திபன் உரையாற்றினார். இதில் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட உயர் அலுவலர்கள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்



இரத்த தான முகாமில் பங்கேற்ற கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர்,மாவட்ட நிர்வாகிகள் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள்

# களம் காண தயாராவோம்!

தமிழகத்தின் டெல்டா மாவட்டங்கள் உட்பட 12 மாவட்டங்களில் கஜா புயலினால் ஏற்பட்ட வெள்ள சேதத்திற்கு கடும் புயல் காற்றினால் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் பொருட் சேதங்களும் பாதிக்கப்பட்ட பொதுமக்கள், அரசு ஊழியர்களுக்கும், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில மையம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

சேதங்களையும் தாங்கிக்கொண்டு மக்களுக்கான வெள்ள நிவாரண பணிகளை பல்வேறு இன்னல்களுக்கு இடையேயும், ஆளும் ஆட்சியாளர்களின் நெருக்கடிகளுக்கும் இடையேயும் இரவு பகல் பாராது, கண் துஞ்சாது உடல்நலத்தையும் குடும்பத்தையும் பாராது உழைத்த வருவாய்த்துறை சொந்தங்களுக்கு மாநிலம் தனது நெஞ்சார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

இந்த சூழ்நிலையில் நிவாரணப் பணிகளுக்காக பிற மாவட்டங்களில் இருந்து வந்து நமது சகோதரர்கள் களப்பணியாற்றி மக்களுக்கு சேவை செய்வதை மாநில மையம் பெருமையோடு பார்க்கிறது. மாநில மையத்தின் சார்பாக துறை தலைமையிடம் தொடர்ந்து பேசியதன் அடிப்படையிலும், எழுத்துமூலமான முறையீட்டின் அடிப்படையிலும் ஏற்கனவே நிவாரண பணிக்கு வந்த சகோதரர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். எனவே மக்கள் நலன் சார்ந்த பணிகளில் நமது தோழர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் என்பது உள்ளபடியே மனநிறைவை தருகிறது.

இந்த நிலைப்பாடு நமது நீண்ட நாள் கோரிக்கையான ஒவ்வொரு மாவட்டத்திற்கும் துணை ஆட்சியர் நிலையில் பேரிடர் மேலாண்மை பணியிடங்கள் பெறுவதற்கு வலுவூட்டுவதாக அமையும்.

மேலும் துறைவாரியான கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக அரசினை நிர்பந்தப்படுத்தவும், வருவாய்த் துறையில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்கள், நில அளவைத்துறை, கிராம உதவியாளர்கள் ஆகியோரை இணைத்து கொண்டு கூட்டமைப்பு ஏற்படுத்திடவும், கூட்டு போராட்டங்களை திட்டமிடவும் வேண்டியுள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்பை பொறுத்து நடைபெற உள்ள பொது கோரிக்கைகளுக்கான ஜாக்டோ- ஜியோ போன்ற போராட்ட நடவடிக்கைகளுக்கும் நம்மை முழுமையாக இணைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது.

எனவே போராட்ட குணத்தோடு எப்போதும் தயாராக இருப்போம். களம் காண்போம். வெற்றிக்கான பாதையை திட்டமிடுவோம். மத்திய செயற்குழுவில் கூடி முடிவு எடுப்போம்.

**- மாநில மையம்**

சங்க குரல் இதழுக்கான கட்டுரைகள், கவிதைகள், மாவட்ட நிகழ்வுகளை தொடர்ந்து அனுப்பவும். மாநில மைய கட்டிட நிதி நிலுவையில் உள்ள மாவட்டங்கள் நிலுவையை நேர் செய்யவும். நிதி வழங்காத மாவட்டங்கள் எதிர்வரும் மத்திய செயற்குழுவில் முழுமையாகவும் வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறோம்.

**- மாநில மையம்**

# நெல் ஜெயராமன் எனும் அழியாத விதைநெல்!?

திருத்துறைப்பூண்டியை அடுத்த கட்டிமேடு கிராமத்தில் சிறு விவசாயி ராமசாமி - முத்துலெட்சுமி தம்பதியின் மூன்றாவது மகனாகப் பிறந்தவர் ஜெயராமன். பத்தாம் வகுப்புத் தேர்வில் ஏற்பட்ட தோல்வி காரணமாக அவரது பார்வை விவசாயத்தின் பக்கம் திருப்பியது. பின்னர் அச்சகத்தில் வேலை பார்த்துக்கொண்டே, தனது தந்தையின் விவசாயப் பணிக்கு உதவியாக இருந்தார். விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் நிறைந்த திருத்துறைப்பூண்டி பகுதியில் எந்த ஒரு விஷயத்தையும் இடதுசாரிச் சிந்தனையோடு அணுகும் மனப்பாங்கு இயல்பாகவே ஜெயராமனிடம் இருந்தது.

ராஜீவ் காந்தி கொண்டுவந்த நுகர்வோர் உரிமைச் சட்டம் ஜெயராமன் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை உண்டாக்கியது. பள்ளிக்கல்வியைத் தாண்டியிராத அவர் நுகர்வோர் பிரச்சினைகளுக்காக வாதாடும் வழக்கறிஞர் ஆனார். நுகர்வோர் அமைப்பின் நிர்வாகியானவர் அதன் நீட்சியாக விவசாயிகள் பிரச்சினைகளையும் பேசுபவர் ஆனார். விவசாயிகளுக்கான போராட்டங்களுக்குக் குரல் கொடுத்தவர், இன்னொரு பக்கம் விவசாயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சுயசீர்திருத்தத்தையும் யோசித்தார். நம்மாழ்வாரை அவர் தேடிச்சென்றது இப்படித்தான்.

### நெல் பாதுகாவலர்

நுகர்வோர் நலனைக் காக்க ஜெயராமன் போராடிக்கொண்டிருந்த காலத்தில்தான் நம்மாழ்வாருடன் தொடர்பு ஏற்பட்டது. ரசாயன உரங்களைத் தவிர்த்து, இயற்கை வழி விவசாயத்தை வளர்க்க வேண்டும் என்ற பிரச்சாரத்தை அப்போது பெரிய அளவில் தொடங்கியிருந்தார் நம்மாழ்வார். 2006-ல் கல்லணை முதல் பூம்புகார் வரை நம்மாழ்வார் நடைப்பயணம் மேற்கொண்டபோது அவருடன் ஜெயராமனும் சென்றார். தலைஞாயிறு என்ற ஊரை நடைப்பயணம் அடைந்தபோது அங்கு வயதான விவசாயி வடுகூர் ராமகிருஷ்ணனை நம்மாழ்வாரும் ஜெயராமனும் சந்தித்தனர்.

தன்னிடம் இருந்த காட்டுயானம் என்கின்ற பாரம்பரிய நெல் ரகத்தை நம்மாழ்வாரிடம்




கொடுத்தார் ராமகிருஷ்ணன். ''இதேபோல பல நெல் ரகங்கள் இப்பகுதியில் விவசாயிகளிடம் உள்ளன. அவற்றைப் பெற்றுக்கொண்டு, உற்பத்தி செய்து, அழிவின் விளிம்பில் உள்ள நெல் ரகங்களைப் பாதுகாக்க வேண்டும்'' என்றார். அந்தப் பணியை ஜெயராமனிடம் ஒப்படைத்தார் நம்மாழ்வார். மீதமுள்ள தன் நடைப்பயணத்தில் பாரம்பரிய நெல் ரகங்களையும் சேகரிக்கத் தொடங்கியபோது, அங்கு கிடைத்த பால் குடவாலை, பூங்கார், குடவாலை, காட்டுயானம் உள்ளிட்ட 7 நெல் ரகங்களையும் ஜெயராமனிடம் கொடுத்த நம்மாழ்வார், "இன்னையிலருந்து ஒங்களுக்கு நெல் ஜெயராமன்னு பேரு வைக்கிறேன். நம்முடைய பாரம்பரிய நெல் வகைகளைச் சேகரிங்க'' என்றார்.

புதிய ரக நெல் சேகரிப்பு அத்தனை எளிதான காரியமாக இருக்கவில்லை. தமிழ்நாடு முழுக்க இதற்காக நடந்தார் ஜெயராமன். சிலரிடம் ஒரு மரக்கால் நெல்லைப் பெற ஏழெட்டு முறை வரை அவர் அலைந்த கதைகளும் உண்டு.

நம்மாழ்வாரின் வழிகாட்டலில் வளர்க்கப்பட்ட நெல் ரகங்களெல்லாம் அடுத்த ஆண்டு முதல் விவசாயிகளிடம் பரவலாக்கப்பட்டது. இதற்கெனவே நெல் திருவிழாக்களை நடத்தினார் ஜெயராமன்.

### பிற மாநிலங்களுக்கும் முன்னுதாரணர்

ஆரம்பத்தில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதி விவசாயிகளும் வரும் நிகழ்வாக இருந்த இது விரைவிலேயே ஆந்திரம், கேரளம், கர்நாடகம் என்று விரிந்து ஒடிஷா, வங்கம், பஞ்சாப், வட கிழக்கு மாநில விவசாயிகள் என்று பரவத் தொடங்கியது. திருவிழாவுக்கு வருபவர்களிடம்

பாரம்பரிய ரக விதைநெல்லை இரண்டு கிலோ கொடுத்துவிட்டு, அடுத்த முறை அவர்கள் விளைச்சலிலிருந்து நான்கு கிலோ விதைநெல்லாக வாங்கிக்கொண்டார் ஜெயராமன். இதேபோல புதிய ரக விதைநெல் கொண்டுவருபவர்களிடமும் இரண்டு கிலோ விதைநெல்லைப் பெற்றுக்கொண்டு, பதிலுக்கு நான்கு கிலோ வழங்கினார். விவசாயிகளை அணுக விவசாயியாக இருந்து சிந்திப்பது எவ்வளவு முக்கியம் என்பதற்கான சான்று இது.

நம்மாழ்வாரின் நட்பைப் பயன்படுத்தி தமிழகம் முழுவதும் உள்ள பாரம்பரிய விவசாயிகளோடு இரண்டறக் கலந்த நெல் ஜெயராமன், திருத்துறைப்பூண்டி பகுதியில் தேசிய அளவிலான நெல் திருவிழாக்களை நடத்தி 41,000 விவசாயிகளுக்கு 174 பாரம்பரிய நெல் ரகங்களை வழங்கியுள்ளார் என்பது மிகப் பெரும் சாதனை. 2017-ல் நடந்த தேசிய நெல் திருவிழா இவற்றின் உச்சமாக இருந்தது. ‘‘கேரளம், தெலங்கானா போன்ற மாநிலங்கள் இயற்கை வழி விவசாயத்தை அங்கீகரித்துவிட்ட நிலையில் தமிழகமும் அதை நோக்கிப் பயணித்துக்கொண்டிருப்பதை இந்தப் பெரும் கூட்டம் உணர்த்துகிறது’’ என்று அப்போது பேசுகையில் குறிப்பிட்டார் ஜெயராமன்.

இவ்வளவு முக்கியமான பணிகளுக்கு இடையே காவிரி நீரின் உரிமைக்காக, விதைகளை மரபணு மாற்றம் செய்வதற்கு எதிராக என்று பல்வேறு போராட்டங்களிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர் நெல் ஜெயராமன். ஜெயராமன் நடத்திய கருத்தரங்குகளும் அவற்றில் விவசாயிகள் பகிர்ந்துகொண்ட நேரடி அனுபவங்களும் விவசாயத்துக்கு வெளியே தகவல் தொழில்நுட்பத் துறை உள்ளிட்ட துறைகளில் இருந்த ஒரு புதிய கூட்டத்தை விவசாயம் நோக்கி இழுத்து வந்தது.

பாரம்பரிய நெல் ரகங்களுக்கு மருத்துவக் குணம் என்று கூறியவர் ஜெயராமன். புற்றுநோயாளிகளுக்கு குள்ளங்கார், நீரிழிவு நோயாளிகளுக்கு கருப்புக்கவுனி, மாப்பிள்ளைச் சம்பா, காட்டுயானம் ஆகிய நெல் ரகங்களை அவர் பரிந்துரைத்தார். உடல்நிலையில் மேம்பாட்டை அவை உருவாக்கியதை அனுபவ அடிப்படையில் பகிர்ந்துகொண்டார். மரபைப் பேசியதாலேயே ஜெயராமனைப் பழமைவாதி என்று கூறிவிட இயலாது.

## நடைமுறைவாதி

“இன்றைக்கு நவீனக் கண்டுபிடிப்பாகப் பார்க்கப் படுவது நாளைக்குப் பழமையாக மாறிவிடலாம். இன்னும் நூறாண்டுகளுக்குப் பின் அது மரபாகப் பார்க்கப்படலாம். நம் முன்னோர்கள் பயன்படுத்திய பாரம்பரிய நெல் ரகங்களுக்கும் இது பொருந்தும். இன்று நாம் அதைப் பாரம்பரிய நெல் ரகம் என்று சொல்கிறோம். ஆனால், நேற்றைய நவீனக் கண்டுபிடுப்புகள்தான் அவை. இந்த மண்ணில் நாம் எதிர்கொண்ட அதே பிரச்சினையை நம் முன்னோர்களும் எதிர்கொண்டிருப்பார்கள் - அதற்கான தீர்வையே கண்டுபிடிப்பாக மாற்றியிருப்பார்கள். சுனாமிக்குப் பின் இங்கே பல பகுதிகளில் கடல் நீர் உள்ளே புகுந்துவிட்டது. வயல் செத்துவிட்டது; இனி விவசாயமே செய்ய முடியாது என்றிருந்த நிலங்களில் எல்லாம் பாரம்பரிய ரகங்கள் முளைத்தன. பெரும் விளைச்சலைத் தந்தன. நான் பழமையைப் பிடித்துக்கொண்டு தொங்கவில்லை. எது நிலைக்குமோ அது நிலைக்கட்டும், காலத்துக்குப் பொருந்தாதது தொலையட்டும். எனக்கு வியாதி வரும்போது கசாயம் குடிக்கிறேன், அது கேட்காதபோது நவீன மருத்துவத்தையும் நாடுகிறேன். ஆனால், இரண்டுக்குமான தேவைகள், இரண்டுக்குமான எல்லைகள் இருக்கின்றன என்றே நம்புகிறேன்” என்று சொன்னவர் ஜெயராமன்.

ஏழ்மை பலரிடமும் சமூக உணர்வை மழுங்கடித்துவிடும். ஆனால், ஜெயராமன் விதிவிலக்கு. புற்றுநோயோடு போராடிக்கொண்டிருந்த இறுதி நாட்களிலும் “எனக்கு என்னுடைய குடும்பம், தனிப்பட்ட வாழ்க்கையெல்லாம் ஒரு பொருட்டல்ல. மக்களுக்காக ஓடுகிறோம். மக்கள் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால், நிறைய வேலை இருக்கும்போது பாதியைக்கூட முடிக்கவில்லையே என்ற கவலைதான் என்னைக் கடுமையாக வருத்துகிறது!” என்று ‘இந்து தமிழ்’ நாளிதழுக்கு அளித்த கடைசிப் பேட்டியிலும்கூட குறிப்பிட்டிருந்தார். விதைநெல் அவர். இந்தச் சமூகத்தின் விருட்சமாவார்.

- **எஸ்.கோபாலகிருஷ்ணன்**

நன்றி : தி இந்து தமிழ்

# ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் போராட்டம்

டெல்லி அரசு ஊழியர், ஆசிரியர்களுக்குப் பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டுவர சட்டமியற்றப் போவதாக அம்மாநில முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் கடந்த மாதம் அறிவித்தார். அதற்கான சட்டமன்றத் தீர்மான நகல் முன்மொழிவும் ஊடகங்களில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதேபோல், ஆந்திர அரசும், கேரள அரசும் இதற்கென ஐஏஎஸ் அதிகாரிகளைக் கொண்ட குழுவை அமைத்துள்ளன. வங்கத்தில் பழைய ஓய்வூதியத் திட்டமே இன்றும் தொடர்கிறது. புதிய ஓய்வூதியத் திட்டத்தால் எதிர்காலத்தை இழந்துநின்ற அரசு ஊழியர்களின் உரிமைக் குரலுக்கு மதிப்பளித்து இந்த மாநில அரசுகள் எடுத்த நடவடிக்கை இவை.

பாஜக தலைமையிலான மத்திய அரசு 20.12.2003 தேதியிட்டு நிர்வாக ஆணை மூலமாக 1.1.2004-லிருந்து புதிய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்தியது. ஆனால், 2014 செப்டம்பர் 4-ல்தான் மசோதா நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இதற்கிடையில், தமிழகத்தில் 1.4.2003-லேயே புதிய ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்தப்பட்டுவிட்டது. சரி, ஏன் புதிய ஓய்வூதியத் திட்டத்தை அரசு ஊழியர்கள் எதிர்க்கிறார்கள்?

### ஓய்வூதியத்தின் நிச்சயமின்மை

புதிய ஓய்வூதியத் திட்டத்தின்படி ஊழியர்களின் அடிப்படை சம்பளம் மற்றும் பஞ்சப்படியிலிருந்து 10% பிடித்தம் செய்யப்படும். அரசு 10% பணத்தைப் போடும். அதற்குரிய வட்டியையும் (தற்போது 8%) அரசு கொடுக்கும். இதை நிர்வகிக்க ஓய்வூதிய ஒழுங்குமுறை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணத்தை நிர்வகிக்க பொதுத் துறை மற்றும் தனியார் நிதி மேலாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். யூடிஐ, எல்ஐசி, பாரத ஸ்டேட் வங்கி, ரிலையன்ஸ் உள்ளிட்டவற்றின் நிதி மேலாளர்கள் அந்த நிதியைப் பங்கு மூலதனத்தில் போடுவார்கள். பங்குகளின் மதிப்பீடு சந்தையில் உயர்ந்தால் சேமிப்புக்கான வட்டி உயரும். பங்குச் சந்தையின் மதிப்பீடு வீழ்ந்தால், சேமிப்பு மதிப்பும் வீழ்ச்சியடையும். ஊழியர்களின் பணத்துக்கு உத்தரவாதம் இல்லை என்கிறது ஓய்வூதிய ஒழுங்குமுறை ஆணைய விதி (பிஎஃப்ஆர்டிஏ).

மேலும், ஒருவர் பணி ஓய்வுபெற்றால் போட்ட பணம் முழுவதும் கிடைக்காது என்பது முக்கியமான பிரச்சினை. சேமிப்பில் 60% மட்டுமே கையில் கிடைக்கும். விருப்ப ஓய்வு பெற்றால் 20% மட்டுமே கிடைக்கும். ஒரு ஊழியரின் பங்களிப்பு, அரசின் பங்கு என்று மொத்தம் ரூ.10 லட்சம் சேர்த்திருந்தால், அந்த ஊழியருக்குக் கையில் ரூ.6 லட்சம் கிடைக்கும். எல்ஐசி ஓய்வூதிய ஆண்டுத் தொகைத் திட்டத்தில் ரூ.4 லட்சம் போடப்படும்.

இந்தத் திட்டத்தில் பல வகைகள் உண்டு. ஊழியருக்கு மட்டும் என்றால் பணம் சற்று அதிகமாகவும், அவருக்குப் பின் அவரது மனைவிக்கும் வாரிசுக்கும் என்றால் மிகக் குறைவாகவும் கிடைக்கும். எப்படி இருந்தாலும் முதல் 7 ஆண்டுகளுக்கு வட்டி 8%-க்குக் குறைவாகவே இருக்கும். ஒரு உதாரணம்: ரயில்வே ஊழியர் ஒருவர் 2008-ல் இறந்ததைத் தொடர்ந்து, கருணை அடிப்படையில் அவரது பணி அவரது மனைவிக்கு வழங்கப்பட்டது. 10 வருடம் பணி முடித்து அந்தப் பெண் ஓய்வு பெற்றார். அவருடைய அடிப்படைச் சம்பளம் ரூ.31,000. அவர் சேமித்த தொகை ரூ.5,93,000. கைக்குக் கிடைத்தது ரூ.3,80,000. அதாவது 60% கைக்குக் கிடைத்தது. மீதி 40% தொகையான ரூ.2,13,000 ஆண்டுத் தொகைத் திட்டத்தில் போடப்பட்டது. வாரிசு இல்லாததால் தனக்கு மட்டுமே வாழ்நாள் முழுவதற்கும் ஓய்வூதியம் கேட்டிருந்தார். தற்போது அவருக்குக் கிடைக்கும் மாத ஓய்வூதியம் எவ்வளவு தெரியுமா? வெறும் ரூ.1,200 மட்டுமே!

### சாத்தியமற்ற நடைமுறை

பழைய ஓய்வூதியத் திட்டம் என்றால், அவர் வாங்கிய அடிப்படை சம்பளத்தில் பாதித் தொகை, அதாவது ரூ.15,500 மாத ஓய்வூதியமாக அவருக்குக் கிடைத்திருக்கும். இதற்குப் பஞ்சப்படியும் உண்டு. புதிய ஓய்வூதியத் திட்டத்தின்படி, இந்த ஊழியர் ரூ.15,500 மாத ஓய்வூதியமாகப் பெற வேண்டும் என்றால் ஆண்டுத்தொகைத் திட்டத்துக்காகக் குறைந்தபட்சம் அவர் ரூ.21,37,500-ஐச் சேமித்திருக்க வேண்டும்.

மத்திய அரசின் குறைந்தபட்ச ஓய்வூதியமான ரூ.9,000 பெற வேண்டும் என்றால் ரூ.10,00,000 சேமிக்க வேண்டும். எந்தக் கடைநிலை ஊழியராலும் இந்தப் பணத்தைச் சேர்க்கவே முடியாது. வாரிசுகளின் கல்வி, திருமணம், மருத்துவம் என்று கடன் வாங்கியிருந்தால் நிலைமை என்னவாகும்? இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட்டாக வேண்டும். புதிய ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்த மாநில அரசு ஊழியர்கள் பணியின்போது இறந்தால் குடும்ப ஓய்வூதியமோ, பணிக்கொடையோ கிடையாது. மத்திய அரசு ஊழியர் பணியிலிருக்கும்போது மரணமடைந்தால் குடும்ப ஓய்வூதியமும் பணிக்கொடையும் சட்டப்படி கிடைக்கும். எவ்வளவு வேறுபாடு பாருங்கள்!

புதிய ஓய்வூதியத் திட்டத்துக்குத் தமிழக அரசு ஊழியர்கள் மத்தியில் எழுந்த நியாயமான எதிர்ப்பை உணர்ந்த மறைந்த முதல்வர் ஜெயலலிதா, 2011 தேர்தலின்போது அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால், புதிய ஓய்வூதியத் திட்டம் மறுபரிசீலனை செய்யப்படும் என்று உறுதிமொழி வழங்கினார். ஆனால், அது நிறைவேறவில்லை. பின்னர், அரசு ஊழியர் - ஆசிரியர் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தியதைத் தொடர்ந்து மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டுவர 2016-ல் வல்லுநர் குழுவை அமைத்தார். ஏழு முறை கால நீட்டிப்பு வழங்கப்பட்டு 27.11.2018-ல் தன் பரிந்துரையை வழங்கியிருக்கிறது அந்தக் குழு.

### அரசு மனது வைக்க வேண்டும்

இந்தக் காலகட்டத்தில் புதிய ஓய்வூதியத் திட்டத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் 5,06,000 பேர் சேர்ந்துள்ளார்கள். அவர்களிடமிருந்து 31.3.2018 வரை ரூ.22,981 கோடி பணம் பிடிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஓய்வு பெற்றவர்கள், விருப்ப ஓய்வு பெற்றவர்கள், பணியின்போது இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 6,768. 'அரசிடம் இதற்கு மேல் எந்த நிதியையும் (ஓய்வூதியம்) கோர மாட்டோம், வழக்கும் போட மாட்டோம்' என்று எழுதி வாங்கிக்கொண்டு அவர்கள் சேர்த்த மொத்த முழுப்பணமும் வழங்கப்பட்டு விட்டது. இந்தக் காலகட்டத்தில் பணியின்போது இறந்தவர்கள் எண்ணிக்கை பற்றி தகவல் இல்லை என்றும் அரசு கூறியுள்ளது. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி பெறப்பட்ட தகவல்கள் இவை.

1950-ல் ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்தப்பட்டபோது அன்றிருந்த பங்களிப்பு வைப்பு நிதியிலிருந்து பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை அரசே சுழல் நிதியாக வைத்துக் கொண்டது. மத்திய அரசில் புதிய ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்துள்ளவர்கள் 19 லட்சம் பேர். வட்டியையும் சேர்த்து 31.7.2018 கணக்கின்படி, அரசு வழங்கிய பணம் ரூ.91,005 கோடி. எல்லா மாநிலங்களைச் சேர்ந்த அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மொத்தம் 59 லட்சம் பேர் ரூ.1,26,220 கோடி சேர்த்துவைத்துள்ளார்கள்.

எனவே, மத்திய - மாநில அரசு ஊழியர்கள் சேர்த்துவைத்துள்ள ரூ.2,17,225 கோடியை சுழல் நிதியாக வைத்துக்கொண்டு செலவில்லாமலேயே பழைய ஓய்வூதியத் திட்டத்துக்கு அரசு மாற முடியும். அதன் மூலம் அரசு ஊழியர்கள் மட்டுமின்றி, அரசும் பயனடையும். அர்ஜென்டினா, பிரேசில் போன்ற நாடுகளில் புதிய ஓய்வூதியத் திட்டத்தை எதிர்த்துப் போராடிய அரசு ஊழியர்கள் அதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இதோ, நம் நாட்டில் ஜனவரி 8, 9 தேதிகளில் நாடு தழுவிய வேலை நிறுத்தம் நடத்தவிருக்கிறார்கள் அரசு ஊழியர்கள். இங்கும் அந்த வெற்றி சாத்தியமாகட்டும்!

- **எம்.துரைபாண்டியன்,**
பொதுச்செயலாளர்,
மத்திய அரசு ஊழியர் மகா சம்மேளனம்.

(தொகுப்பு: **எம்.பி.முருகையன்,**
மாநிலச் செயலாளர், தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கம்)

# புயலில் பனை மரங்கள் தாக்குப்பிடித்தது எப்படி?

கஜா புயலின்போது, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களில், பனை தவிர பிற வகை மரங்கள், தொலைத்தொடர்புக் கோபுரங்கள், மின்கம்பங்கள் வேருடன் சாய்ந்த நிலையில், வீடுகளின் கூரைகள் பிய்த்துக்கொண்டு போன நிலையில், புயலின் வேகத்தை எதிர்கொண்டு ஆயிரக்கணக்கான பனை மரங்கள் விழாமல் தாக்குப்பிடித்திருக்கின்றன.

இதுபோன்ற தீவிரமான பருவநிலை நிகழ்வுகளின்போது, பனை மரங்களால் எப்படித் தாக்குப்பிடிக்க முடிகிறது என்று விளக்குகிறார், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியின் தாவரவியல் துறையின் முன்னாள் தலைவர் எம்.நரசிம்மன். "பனை மரங்கள் தாக்குப்பிடித்து நிற்பதற்கு மூன்று முக்கியக் காரணங்கள் உண்டு. முதலாவது, பனை மர வேரின் அமைப்பு. பனை மர வேர் நார்த்தன்மை கொண்டது என்றாலும், அதன் சுவாசத் திறன் அதிகம். இரண்டாவதாக, பனை மரத் தண்டின் நாள அமைப்பு அதை இலகுவானதாக வைத்திருக்கிறது. மூன்றாவதாக, மரத் தின் உச்சிப் பகுதி. மடங்கிய இலைகளும், அதன் அமைப்பும் வலுவான காற்றையும் தாக்குப்பிடித்து நிற்க உதவுகிறது" என்கிறார் அவர்.

கஜா புயலில் பனை மரங்கள் அனைத்தும் தப்பிவிட்டன என்று சொல்ல முடியாது. சில மரங்கள் விழுந்திருக்கின்றன. ஆனால், தென்னை மரங்களை இரண்டு மூன்று துண்டுகளாக உடைத்தெறிந்த புயல் காற்றால், அதேபோன்ற சேதத்தைப் பனை மரத்திடம் ஏற்படுத்த முடியவில்லை. தமிழகத்தின் மாநில மரமான பனை, பழங்காலத்தில் சேர மன்னர்களின் அதிகாரபூர்வ மரமாக இருந்தது.

"தலைக்கனம் இல்லாவிட்டால் எதையும் சமாளிக்கலாம் என்பார்கள். பனை மரத்தைப் பொறுத்தவரை, அதன் தலைப் பகுதி கனமானது அல்ல. 2011-ல் தானே புயலின்போதுகூடப் பனை மரங்கள் தாக்குப்பிடித்து நின்றதைப் பார்த்திருக்கிறேன்" என்கிறார் நரசிம்மன். பனை மரங்களின் தாங்கும் தன்மை, அந்த மரங்கள் அதிகமாக வளர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது. "எங்கெல்லாம் பனை மரங்கள் வளர்கின்றனவோ, அங்கெல்லாம் நிலத்தடி நீர் இருப்பதை உறுதிசெய்துகொள்ள முடியும். ஏனெனில், பனை மரத்தின் வேர்கள் மிக ஆழமாக ஊடுருவக்கூடியவை" என்றும் சுட்டிக்காட்டுகிறார் அவர்.



"பனை மரத்தின் உச்சிப் பகுதி, தண்டுப் பகுதி, வேர்ப் பகுதி ஆகியவற்றின் தனித்தன்மைகள், பேரழிவுகளைத் தாங்கும் வலிமையை அம்மரத்துக்கு அளிக்கின்றன" என்கிறார் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் தாவரவியல் துறைத் தலைவர், டாக்டர் பி.ரவிச்சந்திரன். பனை மரம் தொடர்பாக விரிவான ஆய்வுகளை நடத்தியவர் அவர். தென்னை மரங்களில் இருப்பதைப் போல், பனை மரங்களின் தலைப் பகுதி கனமாக இருக்காது என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார்.

"பனை மரத்தின் வேர்கள், நார்த்தன்மை கொண்டவை. ஐந்தடி சுற்றளவில் படர்ந்திருக்கும் பனை மர வேர்கள், நிலத்துக்குள் 5 முதல் 10 அடி ஆழம் வரை ஊடுருவியிருக்கும். எனவே, பனை மரம் அத்தனை எளிதில் வேரோடு சாய்ந்துவிடாது" என்கிறார் அவர். பனை மரம் ஒற்றைத்தன்மை இல்லாத மரம் என்று சொல்லத்தக்க வகையில், அதன் எடை, வலிமை, கடினத் தன்மை ஆகியவை மாறும் தன்மை கொண்டவை என்று குறிப்பிடுகிறார் டாக்டர் ரவிச்சந்திரன்.

நார்த்தன்மை கொண்ட நாளத் தொகுப்பு கொண்டதன் காரணமாக, பனை மரத்தின் உடற்பகுதியின் வெளிப்புறச் சுவரை நோக்கிச் செல்லச் செல்ல மரத்தின் அடர்த்தி அதிகரிக்கிறது. பின்னர், அது படிப்படியாக நெகிழ்வுத்தன்மையை அடைகிறது. பனை மரத்தின் வெளிப்புற அடுக்கு கடினத்தன்மை கொண்டதாகவும், நெகிழ்வுத்தன்மையுடனும் இருப்பதால், எத்தனை வேகம் கொண்ட காற்றையும் தாங்கி நிற்கும். எளிதில் முறியாது" என்கிறார் அவர்!

நன்றி : **'தி இந்து' ஆங்கிலம்,**
தமிழில் : **வெ.சந்திரமோகன்**

**தொலைபேசி எண் : 28593458**

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION
Recognised in G.O.Ms.No.2141 Public (Service-A)
Department Dated 06.10.1966

*க.எண். 12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*

நாள் : 18.12.2018

பெறுநர்,

அரசு முதன்மை செயலாளர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

ஐயா,

பொருள் : துணை ஆட்சியர் பட்டியல் - 2018 -19 ஆண்டிற்கான துணை ஆட்சியர் பட்டியல் - காலியிட மதிப்பீட்டறிக்கை உயர்த்தி நிர்ணயம் செய்யக் கோருவது- தொடர்பாக.

பார்வை : 1. தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் திருநெல்வேலி மத்திய செயற்குழு முடிவுகள், நாள்: 18.08.2018.

2. தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்க சேலம் மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவுகள், நாள்: 12.10.2018.

3. தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் பல முறையீடுகள் 07.05.2018, 30.5.2018 மற்றும் 18.10.2018.

4. தொடர்புடைய ஆவணங்கள்.

★★★

வணக்கம்.

2018-19ஆம் ஆண்டிற்கான துணை ஆட்சியர் பட்டியல் வெளியிடுவது தொடர்பாகவும் காலியிட மதிப்பீட்டிற்கை நிர்ணயம் செய்வது தொடர்பாகவும் பார்வை 3ல் காணும் கடிதங்களில் முறையீடுகள் அளிக்கப்பட்டிருந்தன.

வருவாய்த் துறையில் உள்ள முக்கிய பணிகளான சட்டம் ஒழுங்கு பராமரிப்பு,பேரிடர் மேலாண்மை, வாக்காளர் பட்டியல் - தேர்தல், வருவாய் நிர்வாகம், முக்கிய பிரமுகர் வருகை ஆகியவை துணை ஆட்சியர் நிலையிலான அலுலவர்களைக் கொண்டே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த துணை ஆட்சியர் பணியிடங்கள் அதிக எண்ணிக்கையில் காலியாக இருக்கும் நிலை தொடர்கிறது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில், வருவாய்க் கோட்ட அலுவலர், நேர்முக உதவியாளர் (பொது) உள்ளிட்ட நிர்வாக முக்கியதுவம் வாய்ந்த துணை ஆட்சியர் நிலை பணியிடங்கள் சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்டவை காலியாக உள்ளன.

தற்போது 2018ஆம் ஆண்டிற்கான மாவட்ட வருவாய் அலுவலர் பட்டியல் வெளியிட சுமார் 64 பணியிடங்கள் காலியிட மதிப்பீட்டறிக்கையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட காலியிடங்களையும், சேர்த்து நடப்பாண்டு துணை ஆட்சியர் பட்டியலின் காலியிட மதிப்பீட்டறிக்கை நிர்ணயம் செய்திட கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இதன் காரணமாக வருவாய்த் துறையில் சுமார் 30 ஆண்டுகள் பணிபுரிந்து விரைவில் பணிஓய்வு பெறஉள்ள கீழ்கண்ட நபர்கள் பணி ஓய்விற்கு முன்பாக பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது என்பதை கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

| பெயர் | மாவட்டம் | பிறந்ததேதி | பணிஓய்வுநாள் | வட்டாட்சியர் பணியேற்புநாள் |
|---|---|---|---|---|
| 1. வி.செல்வராஜ் | வேலூர் | 13.05.1961 | 31.05.2019 | 1.1.2013 |
| 2. எஸ்.ஆரோக்கியசாமி | கிருஷ்ணகிரி | 1.1.2061 | 31.12.2018 | 6.2.2013 |
| 3. கே.இராமசந்திரன் | காஞ்சிபுரம் | 8.5.1961 | 31.5.2019 | 1.3.2013 |
| 4. ட்டி.இரவீந்திரன் | திருவள்ளூர் | 21.5.1961 | 31.5.2019 | 8.3.2013 |
| 5. வி.கே.ஸ்ரீநிவாசன் | திருவள்ளூர் | 16.2.1961 | 28.2.2019 | 13.3.2013 |
| 6. எஸ்.நாகராஜன் | காஞ்சிபுரம் | 6.5.1961 | 31.5.2019 | 1.5.2013 |
| 7. ஆர்.இந்திராதேவி | புதுக்கோட்டை | 15.5.1961 | 31.5.2019 | 11.5.2013 |
| 8. ட்டி.புவனேஸ்வரி | கன்னியாகுமரி | 19.8.1961 | 31.8.2019 | 1.6.2013 |

வருவாய்த் துறையில் பெரும்பான்மையான காலத்தில் சேவை செய்து, பணிஓய்வு காலத்தில் கிடைக்கக் கூடிய கடைசி பதவி உயர்வினை கிடைத்திடும் வகையில் மேற்கண்ட கோரிக்கையை பரிசீலனை செய்து ஆணைகள் பிறப்பிக்கும்படி கனிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும், வருகின்ற 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் விரைவில் நடைபெற இருக்கின்ற நிலையில், துணை ஆட்சியர் நிலையில் முக்கிய பணியிடங்களை நிரப்பிட வேண்டிய அவசியமும் அவசரமும் உள்ளது.

இதுதொடர்பாக கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை ஆணையர் அவர்களிடம் முறையீடு அளிக்கப்பட்டதில், இது குறித்து அரசிடமிருந்து மேலறிக்கை கோரப்படும் பட்சத்தில் உரிய கருத்துரு அரசுக்கு அனுப்ப இயலும் எனத் தெரிவிக்கப்பட்டது. எனவே, தற்போது அரசால் ஒப்புதல் செய்யப்பட்டுள்ள மாவட்ட வருவாய் அலுவலர் காலியிட மதிப்பீடு அறிக்கை 64 காலி பணியிடங்களையும் கருத்தில் கொண்டு, 2018-19ஆம் ஆண்டிற்கான துணை ஆட்சியர் பட்டியலுக்கான காலியிட மதிப்பீட்டு அறிக்கையை அதிகபட்ச எண்ணிக்கையில் நிர்ணயம் செய்து ஆணைகள் வெளியிடுமாறு கனிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

(ஒப்பம்)

**கு.குமரேசன்,**

மாநிலத் தலைவர்

**தொலைபேசி எண் : 28593458**

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION
Recognised in G.O.Ms.No.2141 Public (Service-A)
Department Dated 06.10.1966

*க.எண். 12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*

---

பெறுநர் நாள் : 09.11.2018

இயக்குநர்,
நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டம்,
சர்வே இல்லம், சேப்பாக்கம்,
சென்னை - 600 005.

ஐயா, வணக்கம்.

பொருள் : பணியிடம் - மாவட்ட அலகுகளில் நிலவரித் திட்ட வட்டாட்சியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டது - முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர்) பணியிடம் ஒப்பளிப்பு செய்யக் கோருவது - தொடர்பாக.

பார்வை : 1. அரசாணை எண்: 370, வருவாய்த் (SS4) துறை, நாள்: 26.12.2012.

2. அரசாணை (1D) எண்: 290, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள்: 13.06.2017.

3. நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் கடிதம், ந.க.எண்: இ1/5292/2018, நாள்: 27.03.2018.

4. தொடர்புடைய ஆவணங்கள்.

★★★

பார்வை 1ல் காணும் அரசாணையில், பல்வேறு மாவட்டங்களில் நகர வருவாய் பின்தொடர் பணிகளை 54 வட்டாட்சியர் மற்றும் 108 வருவாய் ஆய்வாளர் பணியிடங்களும் ஒப்பளிப்பு செய்யப்பட்டன. ஆனால், பார்வை 2ல் காணும் அரசாணையில், நகர வருவாய் பின்தொடர் பணிகளுக்கு 15 வருவாய் வட்டாட்சியர் பணியிடங்கள் மட்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பார்வை 3ல் காணும் கடிதத்தில், அரசாணை எண்: 290, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள்: 13.6.2017ன்படி, 14 அலகுகளில் வருவாய் ஆய்வாளர்/உதவியாளர் நிலையில் பணியிடங்கள் ஒப்பளிக்கப்படவில்லை என்பதால் மாவட்ட வருவாய் நிர்வாக பணியிடங்கள் (அ) நிலஅளவை பதிவேடுகள் துறையின் மாவட்ட ஒப்பளிப்பில் பணியிடங்கள் இருப்பின் அதனடிப்படையில் கடனடிப்படையில் பெற்று பூர்த்தி செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாணைஎண்: 290, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள்: 13.6.2017ன்படி, உதவியாளர் நிலையில் வருவாய் ஆய்வாளர் பணியிடம் வழங்கப்படாததால், நகர வருவாய் பின்தொடர் பணிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, ஏற்கனவே வழங்கப்பட்டவாறு, மேற்கண்ட 14 அலகுகளில் வருவாய் ஆய்வாளர் பணியிடங்களை ஒப்பளிப்பு செய்திட கனிவடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.
தங்கள் நம்பிக்கையுள்ள,
(ஒம்-)

**(சு.பார்த்திபன்)** **(கு.குமரேசன்)**
மாநில பொதுச் செயலாளர் மாநிலத் தலைவர்

தொலைபேசி எண் : 28593458

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION
Recognised in G.O.Ms.No.2141 Public (Service-A)
Department Dated 06.10.1966
க.எண். 12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005

Dated: 09.11.2018

To

The Chief Electoral Officer/
Secretary to Government,
Public (Elections) Department,
Secretariat, Chennai - 600 009.

Sir,

Sub : Elections - Sanction of new temporary posts of Personal Assistant (Elections) in the cadre of Deputy Collector one each to Salem, Villupuram and Madurai Districts - Sanction of Personal Assistant (Elections) in the Districts having Six and more Assembly Constituencies – Requested - Reg.

Ref :
1. Tamilnadu Revenue Officials Association, representation, dated: 20.7.2017.
2. The Chief Electoral Officer & Secretary to Government Letter No: 5284/ Ele-V/2017-1,Dated: 28.7.2017.
3. G.O. (MS) No: 856, Public (Elections – V) Department, Dated: 1.11.2018.
4. Other connected records.

***

The Government in the reference third cited, have sanctioned new temporary posts of Personal Assistant (Elections) in the cadre of Deputy Collector one each to Salem, Villupuram and Madurai Districts. We wish to convey our gratitude and wishes for considering the request of our Association and issued the Government Order.

Subsequently, we wish to reiterate our request to sanction a post of Personal Assistant (Elections) for Districts having Six and more Assembly Constituencies. In this regard, we would like to bring the following facts for the kind consideration of the Government.

❖ Though the Electoral Roll Special Summary Revision work is carried out from the month of September to January of every year, the process of Revision of Electoral Roll is now continuous in nature and the work is being carried out throughout the year. The Election Commission of India is emphasizing on inclusion of new and all eligible voters, viz Differently abled and Trans-genders etc.,and an error free Electoral Roll.

- ❖ Even in the Special Summary Revision, elaborate exercise has to be done in the Districts viz., Training of Designate Officers, Providing of electors information, Draft publication and meeting with recognized Political Parties, Posting of staff in Designated Centres and supply of forms 6 to 8, Supply of Electoral Roll to Resident Welfare Associations and GramaSabhas, Publication of Lists in Form 9 to 11 A, Disposal of claims and objections, Supervisory work by Supervisors/AERO/ERO, Reporting to CEO/ECI, Roll printing and Final publication of Rolls.
- ❖ The Election Commission of India, is continuously insisting on purification of Electoral Roll, and accordingly multifarious works likeNERPAP,De-duplication identification and deletion, Logical errors and Demographical similar entries deletion, Suomoto deletion, Family tree correction processes are carried out in Districts.
- ❖ The mammoth task of Aadhaar seeding in the Electoral Roll is to be carried out in Districts, following the orders of the Hon'ble Supreme Court of India.
- ❖ Conducting meeting with political parties, supply of rolls to the political parties and approval of Booth Level Agents (BLAs) appointed by the political parties.
- ❖ Electoral Photo Identity Cards (EPIC) are issued to all newly enrolled voters and duplicate cards are issued on request.

Apart from this, various Electoral awareness activities such as SVEEP (Systematic Voters, Education and Electoral Participation), Electoral Literacy Club, National Voters Day Celebration, ChunavPathshala, Voters Awareness Forums etc., are being carried out in Districts.

- ❖ Various line Departments such as Education Department, Urban Local bodies and Rural Development Department are to be coordinated in the above processes.
- ❖ The Electronic Voting Machines Tracking System (EVMTS) website designed by Election Commission of India is being carried out in Districts.
- ❖ The Electronic Voting Machines (EVMs) has to be mobilised to the required area within the State and out of the State based on the instructions of the ECI.
- ❖ Rationalisation of Polling Station and maintenance, mapping of Polling Stations is carried out as and when ordered by the Election Department.

Hence, considering the volume and sensitive nature of work, one post of Personal Assistant (Elections) is absolutely necessary to carry out all Electoral related work, in following Districts having Six or more number of Assembly Constituencies.

| S.No | Name Of The District | Number Of The Assembly Constituency |
|---|---|---|
| 1. | Trichy | 9 |
| 2. | Cuddalore | 9 |
| 3. | Tiruvannamalai | 8 |
| 4. | Tiruppur | 8 |
| 5. | Erode | 8 |
| 6. | Tanjore | 8 |

| | | |
|---|---|---|
| 7. | Dindigal | 7 |
| 8. | Viruthunagar | 7 |
| 9. | Namakal | 6 |
| 10. | Kanniyakumari | 6 |
| 11. | Toothukudi | 6 |
| 12. | Dharmapuri | 6 |
| 13. | Pudukottai | 6 |
| 14. | Nagapattinam | 6 |

❖ The In the above Districts volume of work related to Electoral Roll is relatively high and an officer in the rank of Deputy Collector is essentially required to complete the work within the stipulated period and to effectively follow the instructions issued by the Election Commission of India.

❖ The systematic review of work of the Electoral Registration Officer (EROs), Assistant Electoral Registration Officer (AEROs), Supervisors and Booth Level Officers (BLOs) is absolutely necessary in these Districts mostly the Urban, the sensitive population of the State.

❖ In most Districts having Six and more Assembly Constituencies, the EROs and AEROs are in the cadre of District Revenue Officer and Deputy Collector/ Assistant Commissioners of Urban Local body respectively and hence an officer in the rank of Deputy Collector is essential in the District Administration for better and effective coordination among the above officials.

❖ More numbers of Complaint Petitions, Right to Information Acts petitions and Courts Cases has to be handled effectively in these Districts.

❖ Due to Voluminous and laborious Electoral related work, other important work carried out by District Administration/ Personal Assistant (General) viz., Law and Order, Protocol, Disaster Management related work, Revenue Administration, Establishment, Grievances, Examinations and other sensitive works in the Districts are getting affected.

❖ Sanction of Personal Assistant (Elections) in the above districts will be much helpful to coordinate with Electoral Roll Observers (IAS cadre officers) appointed by ECI and during conduct of Assembly/ Parliament Elections.

Since, the 50% of the expenditure for the proposed posts are being borne by Government of India,the request for one post of Personal Assistant (Elections) to Collectors to the above Districts may be considered favourably in the interest of the administration and qualitative Electoral Roll and orders passed. Thank you.

Yours faithfully,

sd/-

**(S.Parthiban)** State General Secretary

**(K.Kumaresan)** State President

தொலைபேசி எண் : 28593458

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION
Recognised in G.O.Ms.No.2141 Public (Service-A)
Department Dated 06.10.1966

*க.எண். 12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*

---

*பெறுநர்* *நாள் : 18.12.2018*

*கூடுதல் தலைமை செயலாளர்/*
*வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர்,*
*எழிலகம், சேப்பாக்கம், சென்னை - 600 005.*

*ஐயா, வணக்கம்.*

*பொருள் : வருவாய் நிர்வாகம் - காலியிட மதிப்பீடு அறிக்கை - 2018-19ஆம் ஆண்டிற்கான காலியிட மதிப்பீடு அறிக்கையை வரிவில் ஒப்புதல் செய்வது - அனைத்து நிலைகளில் விகிதாசார அடிப்படையிம் நியமனம் செய்யக் கோருவது - தொடர்பாக.*

*பார்வை : தொடர்புடைய ஆவணங்கள்*

★★★

*வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில், முதுநிலை வருவாய் ஆய்வாளர், இளநிலை வருவாய் ஆய்வாளர், தட்டச்சர் உள்ளிட்ட நிலைகளுக்கான 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆகிய ஆண்டுகளுக்கான காலியிட மதிப்பீட்டு அறிக்கை வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர் அவர்களால் ஒப்புதல் செய்யப்பட்டு, இதன் தொடர்ச்சியாக மேற்கண்ட நிலைகளில் பதவி உயர்வு மற்றும் கருணை அடிப்படை நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*தற்போது, முதுநிலை வருவாய் ஆய்வாளர், இளநிலை வருவாய் ஆய்வாளர், தட்டச்சர் உள்ளிட்ட நிலைகளுக்கான 2018-19ஆம் ஆண்டிற்கான காலியிட மதிப்பீடு அறிக்கை ஒப்புதல் செய்ய வேண்டி உள்ளது. இதன் காரணமாக இவ்வாண்டு அலுவலக உதவியாளர், பதிவுறு எழுத்தர், கிராம நிருவாக அலுவலர் மற்றும் தட்டச்சர் நிலைகளிலிருந்து பதவி உயர்வு பெறாமலும், கருணை அடிப்படையில் நியமனங்கள் செய்யப்படாமலும் உள்ளது.*

*எனவே, முதுநிலை வருவாய் ஆய்வாளர், இளநிலை வருவாய் ஆய்வாளர், தட்டச்ச்ர உள்ளிட்ட நிலைகளுக்கான 2018-19ஆம் ஆண்டிற்கான காலியிட மதிப்பீடு அறிக்கையை விரைவில் ஒப்புதல் செய்யும்படியும், அனைத்து நிலைகளிலும் விதிகளின்படி விகிதாச்சார அடிப்படையில் மட்டும் நியமனம் செய்யும்படியும் கனிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.*

*தங்கள் நம்பிக்கையுள்ள,*
*(ஒப்பம்)*
*கு.குமரேசன், மாநிலத் தலைவர்*

*நகல் : முதன்மை செயலாளர்/வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை-9*

---

முதுநிலைவருவாய் ஆய்வாளர், இளநிலை வருவாய் ஆய்வாளர், தட்டச்சர் உள்ளிட்ட நிலைகளுக்கு பதவி உயர்வு மற்றும் கருணை அடிப்படை பணி நியமனங்களுக்கு 201819ஆம் ஆண்டிற்கான காலியிட மதிப்பீட்டு அறிக்கை ஆணைகளை விரைந்து வெளியிட வலியுறுத்தப்பட்டது.

தொலைபேசி எண் : 28593458

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION
Recognised in G.O.Ms.No.2141 Public (Service-A)
Department Dated 06.10.1966
க.எண். 12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005

பெறுநர் நாள் : 18.12.2018

கூடுதல் தலைமை செயலாளர்/
வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை - 600 005.

ஐயா, வணக்கம்.

பொருள் : பேரிடர் மேலாணம - கஜா புயலின் பாதிப்பு - டெல்டா மாவட்டங்களில் நிவாரணப் பணிகளை பிற மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்கள் மேற்கொண்டது - 3 வாரங்களுக்கும் மேலாக தொடர்ந்து பணிபுரிவது - சுழற்சி அடிப்படையில் அலுவலர்களை நியமனம் செய்திடக் கோருவது - தொடர்பாக.

பார்வை : தொடர்புடைய ஆவணங்கள்

★★★

தமிழகத்தில் கஜா புயலின் பாதிப்பின் காரணமாக, டெல்டா மாவட்டங்களில் ஏறப்ட்ட பாதிப்புகளின் காரணமாக, நிவாரணப் பணிகளை பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருந்த வட்டாட்சியர்/துணை வட்டாட்சியர் நிலையிலான அலுவலர்கள் முழுமையாக மேற்கொண்டனர். இவ்வலுவலர்கள் தொடர்ந்து 3 வாரங்களுக்கு மேலாக பணி செய்வதில் நிலவி வருகின்ற பிரச்சனைகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர் அவர்களின் கவனத்திற்கு மாநில மையத்தால் கொண்டு வரப்பட்டு, இவ்வலுவலர்களை பணிவிடுவிப்பு செய்தமைக்கு மாநில மையத்தின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனால், சில மாவட்டங்களில் இருந்து வந்திருந்த அலுவலர்கள் இதுவரை விடுவிக்கப்படாமல் உள்ளனர். எனவே, பிற மாவட்ட வட்டாட்சியர்கள் / துணை வட்டாட்சியர்கள் தொடர்ச்சியாக பணிபுரிவதில் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு, நிர்வாக மற்றும் அலுவலர் நலன் கருதி, சுழற்சி முறையில் அலுவலர்களை நியமனம் செய்யும்படி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு தக்க வழிகாட்டுதல்கள் வழங்கும்படி கனிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
(ஒப்பம்)
கு.குமரேசன், மாநிலத் தலைவர்

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதியதாக அஞ்செட்டி வட்டம் உருவாக்கம்

அரசாணை எண் 431 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள் 30.10.2018 இன்படி கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டம் பிரிக்கப்பட்டு புதிதாக "அஞ்செட்டி" வட்டம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது

தொலைபேசி எண் : 28593458

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION
Recognised in G.O.Ms.No.2141 Public (Service-A)
Department Dated 06.10.1966
க.எண். 12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005

பெறுநர் நாள் : 18.12.2018

கூடுதல் தலைமை செயலாளர்/
வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை - 600 005.

ஐயா, வணக்கம்.

பொருள் : நீதித்துறை பயிற்சி - பல்வேறு மாவட்டங்களிலிருந்து நீதித்துறை பயிற்சிக்கு அனுப்பப்பட்ட முன்மொழிவுகளின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கக் கோருதல் - தொடர்பாக.

***

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து நீதித்துறை பயிற்சிக்கு தகுதி பெற்றுள்ள நபர்களின் பட்டியல் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர் மற்றும் அரசால் பரிந்துரை செய்யப்பட்டு, சென்னை உயர்நீதிமன்ற அறிவிக்கையின்படி மாவட்டங்களில் நீதித்துறை பயிற்சி அளிக்கப்பட்டட வருகின்றது. வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர் அவர்களின் பரிந்துரையின் பேரில், மதுரை, கோவை, ஈரோடு, திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த 48 வருவாய்த் துறை அலுவலர்களுக்கு சென்னை உயர் நீதிமன்றம் நீதித்துறை பயிற்சி வழங்க உத்தரவுடன் பிறப்பிக்கப்பட்டமைக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நிலையில், கீழ்க்கண்ட மாவட்ட வருவாய் அலகினைச் சேர்ந்த அலுவலர்களுக்கும் நீதித்துறை பயிற்சி அளிக்க உரிய கருத்துருக்கள் அனுப்பப்பட்டு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் மற்றும் அரசின் பரிசீலனையில் நிலுவையில் உள்ளன.

| | வருவாய் மாவட்டம் | அலுவலர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | திருப்பூர் | 5 வட்டாட்சியர்கள் |
| 2. | திருச்சிராப்பன்னி | 8 வட்டாட்சியர்கள் |
| 3. | நாகப்பட்டினம் | 8 வட்டாட்சியர்கள் |
| 4. | இராமநாதபுரம் | 6 வட்டாட்சியர்கள் |
| 5. | கரூர் | 8 வட்டாட்சியர்கள் |
| 6. | திருநெல்வேலி | 8 வட்டாட்சியர்கள் |

நீதித்துறை பயிற்சியில் ஏற்படும் காலதாமதத்தின் காரணமாக வருவாய்த்துறை அலுவலர்களின் பணப்பலன்கள் பாதிப்பு ஏற்படுவதால், மாவட்டங்களிலிருந்து வரப்பெற்று முன்மொழிவுகளின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து நீதிமன்ற ஆணைகள் பெற்றுத் தருமாறு கனிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
(ஒப்பம்)
கு.குமரேசன், மாநிலத் தலைவர்

நகல் : முதன்மை செயலாளர்/வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை-9

# தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் கோரிக்கை ஏற்கப்பட்டு, தேர்தல் பணிகளுக்கான சிறப்பு பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது

ABSTRACT

Elections - Sanction of new temporary posts of Personal Assistant (Elections) in the cadre of Deputy Collector one each to Salem, Vilupuram and Madurai Districts for a period fromm 01.11.2018 to 31.05.2019 - Orders Issued

PUBLIC (ELECTIONS-V) DEPARTMENT

G.O.(Ms).No.856 Dated : 01.11.2018

*விளம்பி, ஐப்பசி - 15*

*திருவள்ளுவர் ஆண்டு 2049*

1. G.O.Ms.No.151, Pubic (Elections. V) Department, Dated: 04.02.2005.
2. G.O.Ms.No.281, Pubic (Elections. V) Department, Dated: 11.03.2005.
3. G.O.Ms.No.218, Pubic (Elections. V) Department, Dated: 23.03.2006.
4. G.O.Ms.No.89, Pubic (Elections. V) Department, Dated: 19.01.2011.
5. G.O.Ms.No.466, Pubic (Elections. V) Department, Dated: 17.05.2013
6. From Thiru S.Parthipan, General Secretary, The Tamil Nadu Revenue Officials' Association, Chennai representation dated 20.07.2017.
7. From the Commissioner of Revenue Administration, Chennai, Lr.No.Ser.1(3)/30928/2017, dated 05.09.2017 and 23.12.2017.

---

ORDER

In Government Orders first and second read above, the following special posts were created initially to look after the work relating to the Special Revision of Electoral Rolls of Intensive and Summary Revision with reference to 01.01.2005 as the qualifying date for a period of six months upto 31.08.2005 and continued from time to time and lastly continued upto 31.05.2019.

| Office | Designation | of of Posts sanctioned |
|---|---|---|
| Office of the District Revenue Officer (Elections), Corporation of Chennai (under the control of the District Election Officer & Commissioner, Corporation of Chennai, Chennai-3 | Tahsildar<br>Deputy Tahsildar<br>Assistant | 1<br><br>2<br>2 |

| | | |
|---|---|---|
| Each of 16 Assembly Constituencies in Chennai Electoral District. | Deputy Tahsildar<br>Assistant | 1<br>1 |
| Each Taluk Office of Ambattur and Tambaram | Deputy Tahsildar<br>Assistant | 4<br>2 |
| Each of the Office of the Corporation of Madurai, Tiruchirappalli, Salem, Coimbatore and Tirunelveli | Deputy Tahsildar<br>Assistant | 1<br>1 |
| Each Taluk Office except Ambattur, Tambaram | Deputy Tahsildar | 1 |
| Each Taluk Office except Ambattur, Tambaram | Junior Assistant | 1 |
| Each Office of the District Election Officer except Chennai | Tahsildar | 1 |

2. In Government Orders third, fourth and fifth read above, the following P.A. (Elections) posts were created to cope with increase of work load in District and are continued from time to time and lastly continued upto 31.05.2019.

| Sl. No. | G.O. in which the posts created | Office | Designation | No.of Posts | Last continued in G.O. |
|---|---|---|---|---|---|
| 1. | G.O.Ms. No.218 Public (Elections V) Department, dated:23.03.2006 | Collectorate Kancheepuram | P.A. (Elections) in the cadre of Deputy Collector | 1 | G.O.Ms. No. 398, Public (Elections.V) Department, dated: 01.06.2018 |
| 2. | G.O.Ms.No.218, Public (Elections.V) Department, dated:23.03.2006 | Collectorate Tiruvallur | P.A. (Elections) in the cadre of Deputy Collector | 1 | G.O.Ms.No. 398, Public (Elections.V) Department, dated:01.06.2018 |
| 3. | G.O.Ms.No.89 Public (Elections.V) Department dated:19.01.2011 | Collectorate Vellore | P.A. (Elections) in the cadre of Deputy Collector | 1 | G.O.Ms.No. 398, Public (Elections.V) Department, dated:01.06.2018 |
| 4. | G.O.Ms.No.89 Public (Elections.V) Department dated:19.01.2011 | Collectorate Coimbatore | P.A. (Elections) in the cadre of Deputy Collector | 1 | G.O.Ms.No. 398, Public (Elections.V) Department, dated:01.06.2018 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | G.O.Ms.No.466 Public (Elections.V) Department dated:17.05.2013 | Collectorate Tirunelveli | P.A. (Elections) in the cadre of Deputy Collector | 1 | G.O.Ms.No. 398, Public (Elections.V) Department, dated:01.06.2018 |

3. In the reference 6th read above, Thiru S.Parthiban, General Secretary, The Tamilnadu Revenue Offcials' Association has stated that the Government have sanctioned continuance of various posts for all the districts for attending election related works. One post of PA (Elections) to the Collectors have been sanctioned only for the following districts.

| Sl.No. | Name of the Districts | Number of the Assembly Constituencies |
|---|---|---|
| 1. | Vellore | 13 |
| 2. | Tiruvallur | 11 |
| 3. | Kancheepuram | 11 |
| 4. | Coimbatore | 10 |
| 5. | Tirunelveli | 10 |

He has also informed that at present the election works are in continuous process throughout the year. Revision of Electoral Roll, SVEEP activities, conduct of elections. NVD celebration, randomization of polling stations and other allied election related works are being attended at district level. At present, the election subject is dealt with by the Personal Assistant (General) to Collector of the districts. Normally, the work load of Personal Assistant (General) to Collector is heavy and sensitive and they are also attending election works with much hardship. Because of this, quality of election related work gets affected and time limit fixed bythe Election Commission of India and Chief Electoral Officer could not be achieved. He has therefore requested that one post of PA (Elections) to Collector may be sanctioned for 17 districts in Tamil Nadu where 6 or more Assembly Constituencies are comprised in that District.

4. The Principal Secretary / Commissioner of Revenue Administration, Chennai was therefore requested to offer his remarks in this regard.

5. The Principal Secretary / Commissioner of Revenue Administration has offered his remars and requested to sanction to Post of Personal Assistant (Elections) to Salem, Viluppuram and Madurai Districts in view of more number of Assembly Constituencies for monitoring the work related to preparation of Electoral rolls etc.

6. The Government, after careful consideration of the request of the Principal Secretary / Commissioner of Revenue Administration, Chennai at para 5 above accord sanction of new temporary posts of Personal Assistant (Elections) in the cadre of Deputy Collector one each to Salem, Viluppuram and Madurai Districts in the minimum of pay Rs.56,100/- Level - 22 @ Rs.56,100-1,77,500 for a period from 01.11.2018 to 31.05.2019.

7. The post sanctioned above shall be eligible for usual pay and other allowances admissible to the above post under the orders in force.

8. The expenditure for the post sanctioned in pare 6 above shall be debitable under the head of account "2015-00 Elections-103-Preparation and Printing of photo Electoral Rolls - State's Expenditure - AA. Legislative Assembly Counstituencies - 01 - Salaries (DPC 2015 00 103 AA 0109). 50% of the expenditure will be borne by the Government of India.

9. This order issues with the concurrence of Finance (Public) Department vide its C.No.54733/Publice/Dated:26.10.2018 and U.O.No.55909/CMPC/Dated:30.10.2018.

(BY ORDER OF THE GOVERNOR)

SATYABRATA SAHOO
CHIEF ELECTORAL OFFICE &
SECRETARY TO GOVERNMENT.

# சந்திப்புகளும் முறையீடுகளும்

*9.11.2018* கூடுதல் தலைமை செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், அரசு முதன்மை செயலாளர், வருவாய் பேரிடர் மேலாண்மைத் துறை. அரசாணை எண்: 856, பொது (தேர்தல்கள்) துறை, நாள்: 1.11.2018ன்படி 3 மாவட்டங்களில் நேர்முக உதவியாளர் (தேர்தல்) பணியிடம் ஏற்படுத்தியமைக்கு நன்றி தெரிவித்தோடு, ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கு மேற்கொண்ட மாவட்டங்களுக்கு நேர்முக உதவியாளர் (தேர்தல்) பணியிடம் ஏற்படுத்தவும் எழுத்துபூர்வமான முறையீடு அளிக்கப்பட்டது. துணை ஆட்சியர் பட்டியலை விரைந்து வெளியிடவும், பல அலுவலர்கள் ஓய்வுபெறவுள்ளதை கருதி அதிகபட்ச எண்ணிக்கையோடு பட்டியல் வெளியிடவும் வலியுறுத்தப்பட்டது.

*16.11.2018* தலைமை தேர்தல் அலுவலர், தமிழ்நாடு அரசாணை எண்: 856, பொது (தேர்தல்கள்) துறை, நாள்: 1.11.2018ன்படி 3 மாவட்டங்களில் நேர்முக உதவியாளர் (தேர்தல்) பணியிடம் ஏற்படுத்தியமைக்கு நன்றி தெரிவித்தோடு, ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கு மேற்கொண்ட மாவட்டங்களுக்கு நேர்முக உதவியாளர் (தேர்தல்) பணியிடம் ஏற்படுத்தவும் எழுத்துபூர்வமான முறையீடுஅளிக்கப்பட்டது.

இயக்குநர் / இணை இயக்குநர், நிலஅளவைத் துறை, சென்னை. மாவட்ட அலகுகளில் நிலவரித் திட்ட வட்டாட்சியர் அலுவலகங்களில் முதுநிலை வருவாய் ஆய்வாளர் (உதவியாளர்) பணியிடம் ஒப்பளிப்பு செய்ய முறையீடு செய்யப்பட்டது.

*18.12.2018 19.12.2018 20.12.2018* கூடுதல் தலைமை செயலாளர் / வருவாய் நிர்வாகம் பேரிடர் மேலாண்மை ஆணையர், அரசு முதன்மை செயலாளர், வருவாய் பேரிடர் மேலாண்மைத் துறை. வருவாய் நிர்வாக பேரிடர் மேலாண்மை இணை ஆணையர் இயக்குநர், சமூக பாதுகாப்புத் திட்டம். துணை ஆட்சியர் பட்டியலை விரைந்து வெளியிடுவது, முதுநிலை / இளநிலை வருவாய் ஆய்வாளர், தட்டச்சர் நிலைகளில் பதவி உயர்வு மற்றும் கருணை அடிப்படை நியமனங்கள் செய்திட காலியிட மதிப்பீடு அறிக்கை இறுதி செய்தல், நீதித்துறை பயிற்சி ஆணைகள், விலையில்லா வேஷ்டி சேலை நிதி ஒதுக்கீடு, வருவாய்த் துறை அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம் உள்ளிட்ட வருவாய்த் துறை அலுவலர்களின் கோரிக்கைகள் தொடர்பாக வலியுறுத்தப்பட்டது. எழுத்துபூர்வமாக முறையீடு அளிக்கப்பட்டது.

தலைமை தேர்தல் அலுவலர், தமிழ்நாடு. ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கு மேற்கொண்ட மாவட்டங்களுக்கு நேர்முக உதவியாளர் (தேர்தல்) பணியிடம் ஏற்படுத்தவும் எழுத்துபூர்வமான முறையீடு அளிக்கப்பட்டது. ❖

# ஓய்வூதியம் நமது உரிமை

தமிழக அரசில் பணியாற்றும் அனைத்து அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தமிழக அரசிற்காகத் தான், தமிழக மக்களுக்குத்தான் உழைக்கிறார்கள் என்ற உண்மை ஆட்சியாளர்களுக்கு புரியாமலேயே இருக்கிறது. 2018-19ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சம்பளத்திற்கு ரூ.52,171 கோடியும், ஓய்வூதியம் மற்றும் ஓய்வுகாலப் பணப்பலன் களுக்கு ரூ.25,362 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவுகள் தமிழகத்தின் மொத்த வருவாயில் 40.02 சதவீதம் மட்டுமே. இதில் ஊதிய மாற்றத்திற்கான செலவினமும் சேர்ந்ததே.

ஓய்வூதியம் என்பது சட்டப்படியான நடைமுறைப்படுத்தப்பட்டது என்பது 1917-ல் சோவியத் யூனியனில் தோழர் லெனின் தலைமையில் அமைந்த அரசு பணி ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம், பணிக்கொடை, சலவைப்படி, முடி வெட்டும்படி, குடும்ப நலன் மற்றும் பாதுகாப்பு போன்ற உரிமைகளை சட்ட ரீதியாக்கியது. இதனைத் தொடர்ந்து 1920-ல் ஆங்கிலேய காலனி அரசு இந்தியாவில் வருவாய்த் துறை, காவல்துறை மற்றும் பொதுப்பணித் துறையினருக்கு மட்டும் ஓய்வூதியத்தை வழங்கியது.

முதல் உலகப்போரின் முடிவில் உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கமும், சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமும் பணி ஓய்வு பெறும்போது வைப்புநிதி திட்டம் செயல்படுத்த வேண்டிய கட்டாயத்தை உருவாக்கின. இதற்கு தொழிலாளர்கள் மட்டுமின்றி நிர்வாகமும் தனது பங்களிப்பை செலுத்த வேண்டும். பின்னர் 17.04.1950-ல் இந்திய அரசு விரிவாக்கப்பட்ட ஓய்வூதிய விதிகளை அறிவித்து நடைமுறைப் படுத்தியது. அப்போதுதான் பொது வருங்கால சேமிப்பு நிதி உருவானது. இதில் நமது பங்களிப்பு இருக்கும். அரசின் பங்களிப்பு செலுத்துவது தவிர்க்கப்பட்டது. இதுதான் அரசாங்கம் 68 ஆண்டுகளாக ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய அரசின் பங்கு பல லட்சம் கோடி ரூபாயை அரசு பல்வேறு பணிகளுக்காக எடுத்துக் கொண்டுதான் ஓய்வூதியம் அளித்து வருகிறது.

பணிக்கொடை சட்டம் என்பது இந்திய அரசியலமைப்பு சட்டத்தின்படி, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படட் சட்டமாகும். 17.02.1982-ல் டி.எஸ்.நகரா மற்றும் ஒருவர் எதிர் இந்திய அரசு என்ற வழக்கில் "பணி ஓய்வுக்கு முன்னர் இருந்த வாழ்க்கைத் தரத்திற்கு சமமான வாழ்க்கைத் தரத்தை உத்திரவாதம் செய்வதாக ஓய்வூதியம் அமைய வேண்டும்" என்று மூவர் அடங்கிய உச்ச நீதிமன்ற பெஞ்ச் தீர்ப்பளித்துள்ளது. எனவே, நமக்கு வழங்க வேண்டிய ஓய்வூதியம் என்பது சட்ட ரீதியானவது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதோடு ஓய்வூதியம் என்பது அரசு தனது ஊழியர்களுக்கு வழங்கும் கருணைத் தொகை அல்ல. அது சட்ட ரீதியான உரிமையாகும். மேலும், சரியாகக் சொன்னால் கொடுபடாத ஊதியம் ஆகும். இது அரசின் விருப்பத்தையோ கருணையோ பெற்று வழங்கப்படுவதில்லை. ஓய்வு பெற்றவர்கள் வேறு எதிர்பார்ப்பு இல்லாமல் கௌரவமான சுயேச்சையாகவும், சுயமரியாதையுடன் கூடிய வாழ்க்கையை நடத்த உதவக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

மத்திய ஊதியக் குழுவில் அதன் தலைவர் நீதியரசன் மாத்தூர் அவர்கள் டாக்டர் அக்ராயட் தத்துவத்தின் அடிப்படையில் உயிர் வாழ்வதற்கான குறைந்தபட்ச தேவையான ரூ.18,000 ஊதியமாகவும், ஓய்வூதியம் ரூ.9,000 அளிக்கவும் பரிந்துரை செய்துள்ளார். ஆனால், இக்கொள்கை தமிழக அரசால் ஏற்கப்படவில்லை.

பழைய ஓய்வூதியத் திட்டம் தொடரவும், புதிய ஓய்வூதியத் திட்டத்தினை ரத்து செய்யவும் என்ற கோரிக்கைக்காக ஜாக்டோ-ஜியோ தொடர்ந்து போராடி வருவதால் ஏற்கனவே திருமதி சந்தாஷீலா நாயர் இ.ஆ.ப., தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு கூடாமலேயே அவரும் பதவியை ராஜினாமா செய்து விட்டார். மேலும், நடைபெற்ற தொடர் போராட்டத்தின் காரணமாக தற்போது ஸ்ரீதர் இ.ஆ.ப. தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு தற்போது அதன் அறிக்கையும் அரசிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அக்குழுவின் அறிக்கை பரம ரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

எனவே, ஓய்வூதியம் என்பது நமது உரிமை. அதனை மீண்டும் பெறும் வரை உரிமைப் போரினைத் தொடர்வோம்.

நன்றி : **ஓய்வூதியர் மாத இதழ்**

**தொகுப்பு : இரா.மங்களபாண்டியன்**,
மாநில துணைத் தலைவர்,
TNROA

**ABSTRACT**

Revenue and Disaster Management - Change of Nomenclature - Revenue Registration, Diaster Management and Mitigation Department as Commissionerate of Revenue Administration and Disaster Management - Orders Issued.

---

**Revenue and Disaster Management Department,**

**Services Wing, Service V Section**

G.O.(Ms) No.444 Dated : 08.11.2018

திருவள்ளுவர் ஆண்டு 2049
விளம்பி வருடம், ஐப்பசி 22

1. G.O.(Ms) No.2676, Revenue Deapartment, dated 01.12.1980.
2. G.O.(Ms) No.249, Revenue Department, dated 27.05.2003.
3. G.O.(Ms) No. 181, Revenue and Disaster Management Department, dated 09.05.2017.
4. The Principal Secretary / Commissioner of Revenue Administration, letter No.O.P.1(2)/001/2008, dated 09.02.2018 and 05.03.2017.

***

In the Government Order first real above, the Board od Revenue was abolished and the departments of Revenue Administration, Land Administration and Land Reforms were created under the control of Commissioner of Revenue Administration, Commissioner of Land Administration and Commissioner of Land Reforms respectively.

2. In the Government Order second read above, the name of the Head of Department 'Revenue Adminstration Department' *(வருவாய் நிருவாகத் துறை)* has been changed as '**Revenue Administration, Disaster Management and Mitigation Department**' *(வருவாய் நிருவாகம் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை).*

3. In the Government Order third read above, the nomenclature of the Revenue Department in the Secretariat have been chaged as '**Revenue and Disaster Management Department**'.

4. In the letter fourth read above, the Additional Chief Secretary / Commissioner of Revenue Administration has suggested to change the nomenclature of the Head of Department namely Revenue Administration, Disaster Management and Mitigation Department as the "**Commissionerate of Revenue Administration and Disaster Management**" due to the change in nomenclature of the Revenue Department in the Tamil Nadu Secretariat as 'Revenue and Disaster Management Department'.

5. The Government after careful examination of the proposal of the Additional Chief Secretary / Commissioner of Revenue Administration have decided to accept it and direct that the nomenclature of the Head of Department "Revenue Administration Disaster Management and Mitigation Department be hereby changed as "**Commissionerate of Revenue Administration and Disaster Management**".

6. This order shall come into force with immediate effect.

7. Necessary amendments to the Tamil Nadu Business Rules, 1978 will be issue in thePersonnal and Administrative Reforms Department seperately.

**By Order of the Governor**

**Atulya Misra**
**Principal Secretary to Government**

# வேலை நிறுத்த போராட்டத்தின் போது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அரசுக்கு வழங்கிய ஆணைகள்

BEFORE THE MADURAI BENCH OF MADRAS HIGH COURT
(Special Original Jurisdiction)
Monday, the Tenth day of December Two Thousand Eighteen
PRESENT
**The Hon'ble Mr.Justice K.K.SASIDHARAN**
**and**
**The Hon'ble Mr.Justice G.R.SWAMINATHAN**
WP(MD) No.23928 of 2018

S.LOGANATHAN, ... PETITIONER

1. THE CHIEF SECRETARY,
GOVERNMENT OF TAMILNADU
SECRETARIAT, FORT. ST. GEORGE,
CHENNAI - 9.
2. THE HOME SECRETARY,
GOVERNMENT OF TAMIL NADU
SECRETARIAT, FORT. ST. GEORGE, CHENNAI
3. THE JOINT ACTION COMMITTEE OF
TAMILNADU TEACHERS ORGAIZATION
GOVERNMENT EMPLOYEES ORGANIZATION,
SECRETARIAT BUILDING, CHENNAI-0
4. M.SUBRAMANIAN,
PRESIDENT, TAMIL NADU GOVERNMENT EMPLOYEES ASSOCIATION,
CHEPAUK, CHENNAI.
5. ANBARASU,
SECRETARY, TAMIL NADU GOVERNMENT EMPLOYEES ASSOCIATION,
CHEPAUK, CHENNAI.
6. MAYAVAN,
CONVENOR, THE JOINT ACTION COMMITTEE OF
TAMILNADU TEACHERS ORGANIZATION - GOVERNMENT
EMPLOYEES ORGANIZATION, SECRETARIAT BUILDING,
CHENNAI ... RESPONDENTS

Petition praying that in the cricumstances stated threin and in the affidavit filed therewith the High Court will be pleased to issue a Writ of Mandamus or any other appropriate, Writ, Order and Direction in the nature of Writ of Mandamus directing the first respondent to prohibit and forbearing the 3rd respondent and its members and respondents 4 to 7 from going on or organising or participating in any kind of strike, agitation in violation of Rule 22 of Tamil Nadu Government Cervants Conduct Rules.

ORDER : This petition coming of for orders upon perusing the petition and the affidavit filed in support thereof and upon hearing the arguments of Mr.M.VIJI, Advocate for the petitioner and of Additional Advocate General for R1 & R2 and Mr.L.SHAJI CHELLAN, Advocate for R3 to R7, the court made the following order:-

(Order of the Court was made by **G.R.SWAMINATHAN., J.**)

Heard the learned counsel for the petitioner and the learned Additional Advocate General for the respondents 1 and 2 and the learned counsel for the respondents 3 to 7.

2. Pursuant to the order dated 21.09.2017 in Contempt Petition (MD) No.1674 of 2017, the Committee that was constituted to look into the implementation of the 7th Central Pay Commission report, subm9itted its report and consequently G.O.Ms.No.303, Finance Department, dated 11.10.2017 came to be issued. In the said Government Order, it has been mentioned that the revised pay level would take notional effect from 01.01.2016 with monetary benefit from 10.10.2017. Since certain pay anomalies arose, there was a

request for rectification of the same and the Government constituted One Man Committee vide G.O.Ms.No.57, Finance Department dated 19.02.2018. The employees felt aggrieved that they have not been given monetary benefit with effect from 01.01.2016 and submitted a representation to the said One Man Committee under the Chairmanship of Mr.M.A.Siddique I.A.S., the Secretary to Government (Expenditure), Finance Department. It appears that the said One Man Committee was not incllined to consider the aforesaid representation madeby the employees in view of the absence of any express term of reference in G.O.Ms.No.57 dated 19.02.2018.

3. We went through the textof the Government Order in full. On a conjoint reading of the preamble portion as well as the terms of reference and talking into account the fact that the Government of India has given monetary benefit from 01.01.2017, we are of the view that the demand made by the employees that they should be given monetary benefit with effect from 01.01.2016 would fall within the terms of reference. Hence, we direct the One Man Committee constituted under G.O.Ms.No.57 dated 19.02.2018 to consider this representation also.

4. The learned Additional Advocate General states that the tenure of the Committee expired on 31.07.2018 and it was extended periodically. The last extension was upto 30.11.2018. Since the Committee is yet to submit its report, we direct the Government to extend the tenure of the Committee and we direct the One Man Committee to answer this issue viz., to give monetary benefits to the employees with effect from 01.01.2016 onwards.

5. The learned Additional Advocate General is directed to circulate a copy of the report of the Expert Committee under the Chairmanship of Thiru T.S.Sridhar, I.A.S., with regard to restoration of old pension scheme in a sealed cover during this week.

6. The Committee shall ake earnest efforts to answer the reference and submit a report to the Government on or before 05.01.2019. Copy of the said report together with the stand of the Government is to be placed before us on 07 January, 2019.

7. Post the writ petition on 07 January, 2019.

8. Mr.Shaji Chellan, learned counsel for the respondents 3 to 7, on earlier occation has undertaken that the Unions would not resort any strike till 11.12.2018. Since this case is adjourned to 07.01.2019. the undertaking given earlier will continue.

sd/-
10.12.2018

/ TRUE COPY /

Sub-Assistant Registrar (C.S.)
Madurai Bench of Madras High Court,
Madurai - 625 023.

TO

1. THE CHIEF SECRETARY,
GOVERNMENT OF TAMILNADU,
SECRETARIAT, FORT. ST. GEORGE,
CHENNAI - 9
2. THE HOME SECRETARY,
GOVERNMENT OF TAMIL NADU,
SECRETARIAT, FORT. ST. GEORGE, CHENNAI.

Copy to :

1. Thiru.T.S.SRIDHAR, I.A.S. (Expert Committee Chairman)
THE SECRETARY TO GOVERNMENT (EXPENDITURE),
FINANCE DEPARTMENT, ST. GEORGE FORT, CHENNAI.
2. THE ADDITIONAL ADVOCATE GENERAL,
MADURAI BENCH OF MADRAS HIGH COURT, MADURAI.

+1. C.C. to Mr.L.SHAJI CHELLAN, Advocate, Sr. No.22977
+1 C.C. TO SPECIAL GOVERNMENT PLEADER, SR. NO. 23191
ORDER IN
WP(MD) NO. 23928 of 2018
Date : 10/122018

❖

தொலைபேசி எண் : 28593458

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION
Recognised in G.O.Ms.No.2141 Public (Service-A)
Department Dated 06.10.1966
க.எண். 12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005

---

பெறுநர்

கூடுதல் தலைமை செயலாளர்/
வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர்,
எழிலகம், சேப்பாக்கம்,
சென்னை - 600 005.

அய்யா,

பொருள் : பேரிடர் - தமிழகத்தில் பெரும் பாதிப்பு ஏற்படுத்தியுள்ள கஜா புயல் - நிவாரணப் பணிகளில் வருவாய்த் துறை அலுவலர்கள் முழுமையாக ஈடுபட்டுள்ளது - நிவாரணப் பணிக்கு வருவாய்த் துறை அலுவலர்களின் ஒரு நாள் ஊதியத்தை வழங்குவது - தொடர்பாக.

பார்வை : 1. அரசாணை (நிலை) எண்:114, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (கே) துறை, நாள் 27.08.2018.

2. தொடர்புடைய ஆவணங்கள்.

***

கஜா புயலால் தமிழக மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. கஜா புயலுக்கு பின்பாக பாதிக்கப்பட்டவர்களை நிவாரண முகாம்களில் தங்க வைத்தல், உயிர் சேதம் மற்றும் உடைமை சேதம் கணக்கெடுப்பு, விவசாய பாதிப்புகள் கணக்கெடுப்பு, நிவாரணம் வழங்குதல் என பாதிக்கப்பட்ட மக்களில் துயர் துடைக்கம் பணியில் வருவாய்த் துறை அலுவலர்கள் ஊன் உறக்கமின்றி அயராது பாடுபட்டு வருகின்றனர்.

இந்த வேளையில், கஜா புயலால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிக்கரம் அளித்திடும் வகையில், தமிழகத்தில் உள்ள வருவாய்த் துறை அலுவலர்கள் அனைவரும் தங்களின் ஒரு நாள் ஊதியத்தை நிவாரண நிதியாக வழங்க உள்ளனர். எனவே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் உள்ள அலுவலர்கள், விருப்பத்தின் அடிப்படையில், ஒரு நாள் ஊதியத்தை பெற்று நிவாரணப் பணிகளுக்கு பயன்படுத்திட ஆவன செய்திடுமாறு கனிவோடு கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

(ஒப்பம்)

**கு.குமரேசன்,**

மாநிலத் தலைவர்.

"Printed by : Thiru K.P.Thiyagaraajan Published by : D.SIVAJOTHI, onbehalf of Tamilnadu Revenue Official's Association, No. 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600 005 and Printed at at Kalaiyaram Printers, 182, Bells Road, Triplicane, Chepauk, Chennai - 5. Phone : 2854 8223 and published from No. 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600 005. Editor : K.C.RAMKUMAR



திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி வட்டாட்சியர் இடைக்கால பணிநீக்கம் செய்யப்பட்டதை கண்டித்து திருவாரூர் மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்கள் 23.11.2018 அன்று இரவு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் மாநில துணைத் தலைவர் சோமசுந்தரம் உரையாற்றினார். மாநில மையத்தின் தலையீட்டின் காரணமாக இடைக்கால பணிநீக்க நடவடிக்கை கைவிடப்பட்டது




கஜா புயல் பாதிக்கப்பட்ட பட்டுக்கோட்டை, திருவாரூர் மாவட்ட பகுதிகளுக்கு தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க கன்னியாகுமரி மாவட்டம்

"VARUVAITHURAI ALUVALAR SANGA KURAL"
December 2018

Under Postal Regd No. : TN/CH(C) / 295 / 15-17
RNI No. TN BIL 2000 / 3800 Dt : 6.6.2002

# ஜாக்டோ ஜியோ உயர் மட்ட குழு கூட்டத்தில் மாநில தலைவர் திரு குமரேசன் உரை



Publishing Date 3rd Week of Every Month
Posting Date : 31.12.2018
Registered New Paper
POSTED AT EGMORE RMS/1 PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM /
UNDER LICENCE NO. TNPMG (CCR) / WPP. 3 / 2015-2017

பெறுநர் :
திரு / திருமதி

If undelivered Please Return to :

சங்கம் : 2859 3458
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்
ப.எண். 38/2, புதிய எண். 12,
கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம்,
சென்னை - 600 005

"Printed by : Thiru K.P.Thiyagaraajan Published by : D.SIVAJOTHI, onbehalf of Tamilnadu Revenue Official's Association, No. 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600 005 and Printed at at Kalaiyaram Printers, 182, Bells Road, Triplicane, Chepauk, Chennai - 5. Phone : 2854 8223 and published from No. 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600 005. Editor : K.C.RAMKUMAR